பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

08 02 2026 SUNDAY 12 40 PM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - மலேசியா இடையே பேரிடர் மேலாண்மை, பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாகின.

2. சத்திஷ்கட் மாநிலத்தில் வளர்ச்சித் திட்டங்களை மேம்படுத்துவது குறித்து மத்திய - மாநில அரசு அதிகாரிகளுடன் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா ஆலோசனை நடத்தினார்.

3. மும்பையில் சட்டவிரோதமாக தங்கியிருந்த பங்களாதேஷை சேர்ந்த நான்கு பேரை மஹாரஷ்ட்ர மாநில காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

4. அமெரிக்கா - ஈரான் இடையேயான பேச்சுக்கள் குறித்து விவாதிப்பதற்காக, இஸ்ரேலிய பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ வரும் புதன்கிழமை அமெரிக்கா செல்கிறார்.

5. உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், சென்னையில் நடைபெற்று வரும் ஆட்டத்தில் நியூஸிலாந்து -ஆப்கானிஸ்தான் அணிகள் விளையாடி வருகின்றன.

>>>>>>>><<<<<<<

மலேசியா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, அந்நாட்டு பிரதமர் திரு. அன்வர் இப்ராஹிமுடன் இருதரப்பு உறவுகள் குறித்து விரிவான பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது இருநாடுகளுக்கு இடையே, பேரிடர் மேலாண்மை ஒத்துழைப்பு, ஊழல் தடுப்பு, செமிகண்டக்டர் உற்பத்தி மற்றும் பாதுகாப்பு குறித்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

அப்போது பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பின் மூலம், தீவிரவாத செயல்கள் தடுக்கப்படுவதுடன், நுண்ணறிவு தகவல் பரிமாற்றம், கடல்சார் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று தெரிவித்தார்.

தீவிரவாத செயல்களை தடுப்பதில் இரட்டை நிலைப்பாட்டை இந்தியா எப்போதும் எடுத்ததில்லை என்றும் அவர் கூறினார்.

எரிசக்தி, உள்கட்டமைப்பு, உற்பத்தித்துறை, மின்னணு பொருளாதாரம் ஆகியவற்றில் இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்புகள் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், சுகாதாரம் மற்றும் உணவு பாதுகாப்பு ஆகியவற்றில் மேலும் ஒத்துழைப்புகள் அதிகரிக்கும் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

இந்தியா - மலேசியா இடையேயான கலாச்சார பரிமாற்றம் நீண்டகாலமாக இருந்து வருவதாக குறிப்பிட்ட அவர், இருநாடுகளுக்கு இடையே ஒலிபரப்புத் துறையில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் மூலம், தமிழ் திரைப்படங்கள் மற்றும் பாடல்கள் அதிக அளவில் மலேசியாவில் ஒலிபரப்பும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

ஆசியான் - இந்திய வர்த்தக சரக்கு ஒப்பந்தத்தை இறுதி செய்வது குறித்து இருநாடுகளும் முடிவு செய்துள்ளதாக அவர் கூறினார்.

இந்தோ - பசிபிக் பகுதியின் வளர்ச்சிக்கு இந்திய - மலேசிய ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது என்று அவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பிரதமர் திரு. நரேந்திர மோடி, மலேசிய வர்த்தகத் துறை தலைவர்களுடன் கலந்துரையாடுகிறார்.

இதன்மூலம், முதலீடுகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மலேசிய பயணத்தை முடித்துக்கொண்டு, இந்தியா திரும்புவதற்கு முன்னதாக, அந்நாட்டில் உள்ள இந்திய தேசிய ராணுவப் படையைச் சேர்ந்த முன்னாள் வீரர்களை பிரதமர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

>>>>>>><<<<<<<

சத்திஷ்கட் மாநிலத்தின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, ராய்ப்பூரில் ஆய்வு மேற்கொண்டார்.

இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்களை மேம்படுத்துவது குறித்து மத்திய - மாநில அரசு அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

இன்று மாலை சத்திஷ்கர் வளர்ச்சி தொடர்பாக நடைபெறும் மாநாட்டில் திரு. அமித் ஷா உரையாற்றுகிறார்.

நாளை, ஜகதால்பூரில் நடைபெறும் Pastar Pandum திருவிழாவில் நிறைவு நிகழ்ச்சியில் அமைச்சர் கலந்து கொள்கிறார்.

>>>>>>><<<<<<<

ஐரோப்பிய யூனியனின் தவிர்க்க முடியாத நட்பு நாடாக இந்தியா மாறியுள்ளது என்று கிரீஸ் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. Nikos Dendias தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் முதலாவது இந்திய - ஐரோப்பிய யூனியன் கூட்டமைப்பின் கூட்டத்தில் உரையாற்றிய அவர், ஐரோப்பிய யூனியன் நாடுகளில் கிரீஸ் நாட்டுடனான இந்தியாவின் முதலீடு மற்றும் பொருளாதார முக்கியத்துவம் அதிகரித்து வருவதாக கூறினார்.

இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையேயான வர்த்தக ஒப்பந்தம், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று திரு. Nikos Dendias குறிப்பிட்டார்.

இதனிடையே, கடந்த இரண்டு நாட்களாக இந்தியா - ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப் பிறகு, வர்த்தகம், பாதுகாப்பு, தொழில்நுட்பம், புவி அரசியல் ஆகியவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

சட்டவிரோத குடியேற்றத்திற்கு எதிரான நடவடிக்கையை, மும்பை காவல்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

மும்பையில் சட்டவிரோதமாக போலி அடையாள ஆவணங்களை பயன்படுத்தி, வசித்து வந்த பங்களாதேஷை சேர்ந்த நான்கு பேர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிழக்கு Malad-ன் பதன்வாடி பகுதியில் நடத்தப்பட்ட தொடர் சோதனைகளை அடுத்து, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மும்பை காவல்துறை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களை மீண்டும் பங்களாதேஷிற்கு அனுப்புவது குறித்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

இஸ்ரேலிய பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ வரும் புதன்கிழமை அமெரிக்காவிற்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் இன்று தெரிவித்துள்ளது.

வாஷிங்டனில் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்பை சந்தித்து, அமெரிக்கா - ஈரான் இடையேயான சமரச பேச்சு தொடர்பாக இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா - ஈரான் இடையேயான பேச்சுவார்த்தையின் ஒப்பந்தத்தில் போர் ஏவுகணைகள் உற்பத்தியை நிறுத்துவது குறித்தும், அப்பகுதியில் உள்ள தீவிரவாத குழுக்களை ஆதரிப்பதை கைவிடுவது தொடர்பான அம்சங்களும் இடம்பெற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம், ஓமனில் நடைபெற்ற அமெரிக்க – ஈரான் பிரதிநிதிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தையை அடுத்து இஸ்ரேல் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், அமெரிக்கா – ஈரான் இடையேயான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அடுத்த வாரம் பேச்சுவார்தை நடைபெறும் என்றும் திரு. ட்ரம்ப் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

ரஷ்யாவின் *Bashkortostan Republic*-ல் உள்ள *UFA* பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்ட கத்திக்குத்து சம்பவத்தில் நான்கு இந்தியர்கள் உட்பட சிலர் காயமடைந்தனர்.

இந்த சம்பவம் மிகவும் துரதிருஷ்டவசமானது என்று ரஷ்யாவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, இந்திய தூதரகம் ரஷ்ய அதிகாரிகளை தொடர்பு கொண்டு, இந்த சம்பவம் குறித்து கவலை தெரிவித்துள்ளது.

மேலும், இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என்று இந்திய தூதரகம் கோரிக்கை விடுத்துள்ளது.

>>>>>>><<<<<<<<

யுக்ரைன் - ரஷ்யா இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துள்ள அமெரிக்காவின் நடவடிக்கைகள் வரும் ஜூன் மாதத்திற்குள் முடிவடைய வேண்டும் என்று யுக்ரைன் அதிபர் திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், இருநாடுகளுக்கு இடையே விவாதிக்கப்பட்டு வரும் விசயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்த அவர், இருநாடுகளுக்கும் இடையே ஒரு காலக்கெடுவிற்குள் அமைதி ஒப்பந்தம் ஏற்படாத பட்சத்தில், அதனை செயல்படுத்த அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் முன்முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அடுத்த வாரம், அமெரிக்காவின் மியாமி நகரில், இருநாடுகளுக்கு இடையேயான அடுத்த சுற்று பேச்சுவார்த்தை நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

அபுதாபியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, இருநாடுகளுக்கும் இடையேயான எல்லை மற்றும் பாதுகாப்பு தொடர்பான உத்தரவாதம் ஆகியவற்றில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இதனையடுத்து, தற்போது அடுத்தகட்ட பேச்சுவார்த்தைகள் நடைபெற தொடங்கியுள்ளதாக திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கி குறிப்பிட்டார்.

>>>>>>><<<<<<<<

ஜப்பான் நாடாளுமன்ற தேர்தல் இன்று நடைபெறுகிறது.

அந்நாட்டு பிரதமர் திருமதி. Sanae Takaichi, தேர்தலை எதிர்கொண்டு ஆட்சியமைக்க வேண்டும் என்ற அடிப்படையில், இந்த உடனடி தேர்தல் நடைபெறுகிறது.

*பாதுகாப்புத் துறைக்கான செலவினங்கள் மற்றும் குடியுரிமை தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளை புதிய பிரதமர் மேற்கொள்ளும் விதத்தில், இந்த தேர்தல் நடைபெறுவதாக ஜப்பான் அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.*

*>>>>>>><<<<<<<*

*உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இன்று மூன்று ஆட்டங்கள் நடைபெறுகின்றன.*

*சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்று வரும் போட்டியில், நியூஸிலாந்து அணி வெற்றிபெற 183 ரன் என்ற இலக்கை ஆப்கானிஸ்தான் நிர்ணயித்துள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*ஆசிய துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் இளவேனில் வாலறிவன் – Arjun Babuta இணை தங்கப்பதக்கம் வென்றது.*

*ஸ்பெயினில் நடைபெற்று வரும் சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் இந்தியா 9 தங்கம், 3 வெள்ளி, 7 வெண்கலப்பதக்கம் வென்று, பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளது.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு 60 கிலோ எடைப்பிரிவில் Sachin Siwach-ம், 75 கிலோ எடைப்பிரிவில் ஆகாஷ் குமாரும் தங்கப்பதக்கம் வென்றனர்.*

*70 கிலோ எடைப்பிரிவில் தீபக் குமாரும், 80 கிலோ எடைப்பிரிவில் Ankush Panghal-ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவில் 48 கிலோ எடைப்பிரிவில் மஞ்சு ராணியும், 51 கிலோ எடைப்பிரிவில் Nitu-வும், 54 கிலோ எடைப்பிரிவில் பூனமும் தங்கப்பதக்கம் வென்றனர்.*

>>>>>>><<<<<<<

அபுதாபி ஓப்பன் மாஸ்டர்ஸ் விளையாட்டுப் போட்டிகள் இன்று தொடங்கியது.

மேற்கு ஆசியாவில் மிகப் பெரிய விளையாட்டுப் போட்டியாக இது கருதப்படுகிறது.

30 வயதிற்கு மேற்பட்ட விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகள் இந்த போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர்.

10 நாட்கள் நடைபெறவுள்ள இப்போட்டியில் 92 நாடுகளைச் சேர்ந்த 25 ஆயிரம் பேர் கலந்து கொள்கின்றனர்.

செஸ், தடகளம், பேட்மிண்டன், வாலிபால், கூடைப்பந்து, கால்பந்து உள்ளிட்ட பிரிவுகளில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

13 பிரிவுகளில், மாற்றுத் திறனாளிகளுக்கான போட்டிகளும் இடம்பெற்றுள்ளன.

இந்த போட்டிகளை சுமார் 5 லட்சம் பார்வையாளர்கள் காணவுள்ளதாக ஐக்கிய அரபு அமிரகம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<